1970 மார்ச் 21]

திரு. எம். எஸ். மணி : திருச்சியில் சிறைச்சாலை இருக்கிற இடம் கந்தக பூமி. மேலும் அந்த இடத்தில் தண்ணீர் பற்றுக்குறை வேறு. ஆகவே காவேரியில் இருந்து அந்தச் சிறைச்சாலைக்குத் தண்ணீர் கொண்டுபோக ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தச் சிறைச்சாலையில் தண்ணீர் இல்லாமல் நான் கஷ்டப்பட்டது கூட நினைவுக்கு வருகிறது. ஆகவே அங்கே போதுமான தண்ணீர் வசதி அளிக்க திட்டமிடப்படவேண்டும் என்று சிறைச்சாலை அதிகாரியிடத்தில் சொல்லியிருக்கிறேம். அவர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள்.

திரு. எம். பூபதி : திருச்சி சிறைச்சாலையில் மஞ்சள் காமாலை காரணமாக எத்தனை பேர்கள் பாதிக்கப்பட்டார்கள்? எத்தனை பேர்கள் இறந்தார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒருவரும் இறக்கவில்லை என்று முன்பே சொன்னேன். 182 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள்.

கதர் துணிகளுக்கு சாயம் இடுதல்

* 486 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968-வது ஆண்டில், காதி இலாகாவில் கையினால் டை அடிப்பதற்கு பதிலாக, ஈரோடு மில்லில் ஆர்டர் கொடுத்து டை அடிக்கப்பட்டது உண்மையா ?

(இ) அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : கையினால் டை அடிப்பதற்குக் கட்டணம் ரூ. 1½. மில்லில் டை அடிப்பதற்கு 10 அணு. இப்படி ஊழல் நடந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டு ஆடிட் ரிப்போர்ட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறதே, அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படி குற்றங்கள் இருப்பதாக என்னிடத்தில் உள்ள ஆடிட் ரிப்போர்ட்டில் எதுவும் இல்லை.

Draft Ordinance on Co-operation.

* 487. *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether any draft Ordinance on the Co-operative Department in this State has been forwarded to the Union Government; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 15—3—1965 தேதியிட்டு 24—3—1965-ல் இப்பேரவையில் வைக்கப்பட்ட வெள்ளை அறிக்கையின் அடிப்படையில் அவசரச்சட்ட வரைவு ஒன்று மத்திய அரசின் ஒப்புதலைப்பெற டெல்லிக்கு அனுப்பப்பட்டது. பின்னர் இப்பேரவைக் கூட்டத்திற்கு நாள் குறிப்பிடப்பட்டுவிட்டதால் அது சாதாரணச் சட்டமாக, 1969/14-ஆம் எண் சட்டமாக நிறைவேற்றப் பட்டது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்தக் கூட்டுறவுச் சட்டத்தை திருத்த வேண்டும் என்பதற்காக சந்தானம் கமிட்டி ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது. அது எந்த நிலையில் இருக்கிறது? இன்னொன்று கேட்கவேண்டும். இப்போது கூட்டுறவு சப்-ரிஜிஸ்திரார் அவர்களே விசாரணை செய்கிறார்கள். அப்படியின்றி முன்சிப் கோர்ட்டுக்கு விசாரணைக்கு அனுப்ப எண்ணம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மூலவினா நிலவள வங்கி சட்டத்தைப் பற்றியது. இப்போது பொதுவான சட்டத்தைப் பற்றிக் கேட்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரமாகச் சொல்லமுடியும்.

ஓட்டல் தொழிலாளர்கள்

***488 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓட்டல் தொழிலாளர்களின் வேலை நிலைமையைப் பற்றி கண்டு ஆராய்ச்சி செய்ய சர்க்காரால் நியமிக்கப்பட்ட விசேஷ அதிகாரியின் அறிக்கையை அமுல்படுத்தும்படி சர்க்கார் உத்திரவு போட்டுள்ளதா?

(இ) மேற்படி அறிக்கை மேஜைமீது வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) ஓட்டல் தொழிலுக்கான சிறப்பு அதிகாரியின் பரிவுரைகளின் மீது 30—5—1969-ஆம் நாளிட்ட 210 எண்ணுள்ள அரசு ஆணையில் அரசு பிறப்பித்துள்ளது.

(இ) முக்கிய பரிவுரைகளும், அவை மீது அரசு பிறப்பித்த ஆணைகளும் அடங்கிய மேற்குறிப்பிட்ட அரசு ஆணையின் நகல் ■ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த விசேஷ அதிகாரி எந்தத் தேதியிலே நியமிக்கப்பட்டார்? அந்த அதிகாரியினுடைய ரிப்போர்ட்டுக்குப் பிறகு லேபர் கமிஷனர் அவர்கள் அதைப் பரிசிலனை செய்து சில பிரச்னைகளை ஏற்றுக்கொள்வதாகக் கூறி சில பிரச்னைகள் பரிசீலனையில் இருந்துவருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பரிசிலனை முடிந்து விட்டதா? எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

■ 112-117-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.